1980 பிப்ரவரி 13]

2 ஒழுங்குப் பிரச்சினை.

அரசியலமைப்புச் சட்டம் 45-வது திருத்தச் சட்டத்திற்கு பேரவை ஏற்பளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைதியாக ஒவ்வொருவராக பாயினட் ஆப் ஆர்டர் கேளுங்கள். முறையாக இருந்தால் அனுமதிக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, கர்நாடக மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு குண்டுராவ் அவர்கள் ‘மண்ணில் பிறந்த மகனுக்குதான் வேலை’ என்று அறிவித்திருக்கிறார். தமிழ் நாட்டில் இருந்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 13 (2)-ன் கீழ்

“ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மலை ஜாதியினருக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை மேலும் பத்தாண்டுகள் நீடிக்க வழிவகை செய்யும் 45-வது அரசியல் சட்ட திருத்த மசோதாவுக்கு தமிழ்நாடு சட்டமன்றம் அங்கீகாரம் வழங்க தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் ”

என்ற தீர்மானத்தை மொழிய.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நீங்கள் இப்படித் தீர்மானம் கொண்டு வரக் கூடாது. இதனை எழுத்து மூலமாக முன்கூட்டியே என்னுடைய அறையிலே வந்து கொடுக்க வேண்டும். அதுதான் முறை. அவ்வாறு கொடுக்கப்பட்டு அது பின்னர் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாவிட்டால்தான் நீங்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியும்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, இது முக்கியமான பிரச்சினை. அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரிசர்வ் செய்வது பற்றி கான்ஸ்ட்டிட்யூஷனிலே அமெண்ட்மென்ட் கொண்டு வரப்பட்டிருக்கின்றது, இந்தக் கூட்டத்தொடர்முடிய இருக்கின்ற காரணத்தால் இந்த அமென்ட்மென்டை ரேட்டிபை செய்வது பற்றி அரசாங்கத் தரப்பிலே ஒரு விளக்கம் தரப்படுமா என்றுதான் கேட்கிறார்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் சொல்கிறேன,

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கத்திலே ஒரு விளக்கம் கோருகிறார்கள். ஆகவே அரசாங்கம் ஒரு விளக்கம் தர முடியுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே. 45-வது அரசியல் சட்டத் திருத்தத்தை ரேட்டிபை செய்வதற்குரிய அந்த முயற்சி அரசின் கொள்கை என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இது குறித்த பார்லிமென்ட் ப்ரொசீடிங்ஸ் அனைத்தையும் அனுப்பி வைக்குமாறு இங்கிருந்து எழுதப்பட்டிருக்கின்றது. அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அந்த ப்ரொசீடிங்ஸ் வந்ததற்குப் பிறகு ரேட்டிபிகேஷன் செய்வதைப் பொறுத்தவரை இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, இந்த அரசு அப்படிப்பட்ட.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அரசு தரப்பிலே அதுபற்றி சொல்லியாகிவிட்டது. அமருங்கள்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, இந்த ரேட்டிபிகேஷனைப் பொறுத்த வரையில் ஆந்திர மாநிலத்திலே ரேட்டிபிகேஷன் முடிந்துவிட்டது. ஆகவே இந்த அரசாங்கம் அந்தக் கொள்கைக்கு விரோதமாக இல்லை என்றால் உடனடியாக ஒரு நாள் அசெம்பிளியைக் கூட்டி ரேட்டிபிகேஷன் செய்து தீர்மானத்தை நிறைவேற்றிவிடலாமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டிலிருந்து அதனுடைய ப்ரோசீடிங்ஸ் வந்த பிறகு நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று அரசின் தரப்பிலே சொல்லப்பட்டு விட்டதே.

3. தகவல் கோரல்

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் நான் ஒன்று சொல்லி விடுகிறேன். கூட்டத்தொடரில் கடைசி நாள் அன்று நான் ஒரு முறையை வைத்துக்கொண்டிருக்கிறேன். நிகழ்ச்சி எல்லாம் முடிந்த பிறகு, நீங்கள் கொடுத்ததை அவையிலே